Registered as a Newspaper

வெளிவந்துவிட்டது!
படிமுறைக் கணிதப் பயிற்சி
7ஆம் வருடம்
(1986 தை முதல் நடைமுறைப் படுத்தப்பட்ட புதிய பாடத் திட்டத்திற்கு அமைவானது.)
விலை: ரூபா 8-50
எல்லாப் புத்தகசாலைகளிலும் கிடைக்கும்
விபரங்களுக்கு:
வி. ச. சுப்பிரமணியம்
குரும்பசிட்டி.

# உதயன்

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

விலை ரூ-1/=

வெளிவந்துவிட்டது!
படிமுறைக் கணிதப் பயிற்சி
7ஆம் வருடம்
(1986 தை முதல் நடைமுறைப் படுத்தப்பட்ட புதிய பாடத் திட்டத்திற்கு அமைவானது.)
விலை: ரூபா 8-50
எல்லாப் புத்தகசாலைகளிலும் கிடைக்கும்
விபரங்களுக்கு:
வி. ச. சுப்பிரமணியம்
குருப்பசிட்டி.

சுடர்:- 1 யாழ்ப்பாணம் குரோதன ஸூ தை மீ 8 உ செவ்வாய்க்கிழமை ஹிஜ்ரி 1406 ரபி. ஐ. அவ். பிறை 10 (21-01-1986) UTHAYAN - A LIVELY TAMIL DAILY கதிர்:-55

★ ஏழாலை, குரும்பசிட்டிப் பகுதிகளில் நடந்த

# இராணுவ அத்துமீறலை கண்டித்து

ஏழாலை குரும்பசிட்டிப்பகுதிகளில் கடந்த 17 ஆம் திகதி நடந்த அட்டூழியங்களைக் கண்டித்தும் பாதுகாப்பு வலயங்களை அகற்றுமாறு கோரியும் நேற்று நடந்த ஊர்வலத்தின் போது எடுக்கப்பட்ட படங்களைக் கீழே காணலாம்.
—படங்கள் சபா.புஷ்பநாதன்

# மக்கள் பேரணி





## நாலாயிரம் பேர் நடத்திய ஆர்ப்பாட்டம்

— சுன்னாகம் செய்தியாளர்: சபா புஷ்பநாதன் —

சுன்னாகம்,ஜன.21

ஏழாலை, குரும்பசிட்டிப் பகுதிகளில் கடந்த 17 ஆம் திகதி இராணுவ அத்துமீறல் நடந்ததாகக் கூறி அதனைக் கண்டித்து நேற்று நீண்ட ஊர்வலம் ஒன்று நடத்தப்பட்டது.

ஈழவர் முன்னணியினால் நடத்தப்பட்ட இந்த ஊர்வலம் குரும்பசிட்டியில் இருந்து புறப்பட்டு ஏழாலை, மல்லாகம், சுன்னாகம் ஊடாக உடுவில் உதவி அரசாங்க அதிபர் பணிமனையைச் சென்றடைந்தது.

ஊர்வலத்தில் மாணவர்கள்,பெண்கள்,வயோதிபர்கள் உட்பட சுமார் நாலாயிரம் பேர் கலந்து கொண்டனர்.

ஊர்வலம் ...டிவில் மேலதிக அரசாங்க அதிபர் திரு. கிருஷ்ணபிள்ளை கோபாலரத்தினத்திடம் மகஜர் ஒன்று கையளிக்கப்பட்டது.

குரும்பசிட்டியில் சூடுபட்டு இறந்தவர்களில் ஒருவரின் மனைவி ஊர்வலத்தில் முன்னணியில் நின்றார்.

"இராணுவமே வெளியேறு" "ஈழவரை வாழவிடுங்கள்" "அரச அட்டூழியங்களை உலகறியச் செய்வோம்" "அந்நிய உளவாளிகளே! எமது மண்ணைவிட்டு வெளியேறுங்கள்" "மக்களைக் கொல்வது தான் தார்மீக மானால் தார்மீகம்எமக்கு வேண்டாம்" என்ற சுலோகங்கள் கோஷிக்கப்பட்டன.

ஊர்வலம் சென்ற பிரதான வீதியூடாக மக்கள்

(4ஆம் பக்கம் பார்க்க)

## லொறியில் கிடந்த 'சடலம்' ஒன்று தண்ணீர் கேட்டது!

மட்டக்களப்பு, ஜன. 21

நம்பினால் நம்புங்கள்! கல்லடி ஆயுதப் படை முகாமில் லொறி ஒன்றினுள் அடுக்கி வைக்கப் பட்டிருந்த "சடல" ஒன்று உயிர் பெற்று எழுந்து முகாமிற்குள் நடந்து சென்றது.

இந்த மயிர்க்கூச் செறியும் சம்பவம் நேற்றுக் காலை இடம்பெற்றது.

இச்சம்பவம் பற்றி அறியப்படுவதாவது:-

கடந்த ஞாயிற்றுக் கிழமை மட்டக்களப்பு இருதயபுரப் பகுதியில் இடம்பெற்ற மோதலில் 21 பேர் கொல்லப்பட்டனர்.

அவர்களில் பலரின் சடலங்கள் கல்லடி ஆயுதப் படை முகாமில் லொறி

(4ஆம் பக்கம் பார்க்க)

## பிரிகேடியருடன் இன்று சந்திப்பு

யாழ்ப்பாணம், ஜன. 21

பிரஜைகள் இணைப்புக் குழு, மக்கள் செயலூக்கக் குழு ஆகியன இன்று யாழ் மாவட்ட இணைப்பு அதிகாரி பிரிகேடியர் எச். எஸ். ரூபசிங்காவைச் சந்திக்கின்றன.

காலை 9 மணிக்கு பிரஜைகள் இணைப்புக்குழு இணைப்பு அதிகாரியைச் சந்திக்கின்றது.

பேராசிரியர் கா. சிவத்தம்பி, திரு. எஸ். அருமைநாயகம், டாக்டர் ஜெகா பசுபதி, திரு. கே.

(4 ஆம் பக்கம் பார்க்க)

மட்டக்களப்பு இருதயபுர மரணங்கள்

## சடலங்களை உறவினரிடம் ஒப்படைக்க அதிகாரி மறுப்பு

### இறந்தோரில் 12 பேர் சைனைட் அருந்தினராம்

மட்டக்களப்பு,ஜன.21

மட்டக்களப்பு, இருதயபுரம் பகுதியில் ஞாயிறு காலை மரணமானவர்களின் சடலங்களை உறவினர்களிடம் கையளிக்க மட்டக்களப்பு இணைப்பு அதிகாரி மறுத்துவிட்டார்.

நேற்றுக் காலை மட்டக்களப்புப் பிரஜைகள் தூதுக் குழு ஒன்று இணைப்பதிகாரியை,ச் சந்தித்துச் சடலங்களை உறவினர்களிடம் கையளிக்கும்படி கேட்டுக்கொண்டது.

உறவினர்கள் வந்து

(4 ஆம் பக்கம் பார்க்க)

# பாதுகாப்பு வலயத்தை உடனே வாபஸ் செய்!

## பல அமைப்புகள் வற்புறுத்து

படத்தில் உள்ள இராணுவமுகாம்களைச் சுற்றி உருவாக்கப்பட்ட பாதுகாப்புவலயங்களை உடன் வாபஸ் பெறுக.

இவ்வாறு பல பொது நல அமைப்புகள் அரசாங்கத்தைக் கோரியுள்ளன.

### சட்டத்தரணிகள் சங்கம் ஆட்சேபம்

கோட்டை இராணுவ முகாமைச் சுற்றி ஒரு கிலோ மீற்றர் பிரதேசத்தை பாதுகாப்புப் வலயமாகப் பிரகடனப்படுத்தியதை உடன் வாபஸ் பெறுமாறு ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனவை யாழ்ப்பாணம் சட்டத்தரணிகள் சங்கம் வற்புறுத்தியுள்ளது.

நேற்று யாழ் மாவட்ட நீதிமன்றக் கட்டடத்தில் திரு. எஸ். ஆர். கனகநாயகம் தலைமையில் கூடிய சட்டத்தரணிகள் சங்கம் இப்படித் தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியது.

பாதுகாப்பு வலய பிரகடனததினால் பொது மக்கள், தனியார் வர்த்தக ஸ்தாபனங்கள், அரசாங்க, வங்கி ஊழியர்கள், பாடசாலை மாணவர்கள், ஆஸ்பத்திரி நோயாளிகள், சட்டத்தரணிகள், நீதிமன்ற உத்தியோகத்தர்கள், கட்சிக்காரர்கள், வலயத்துள் குடியிருக்கும் குடிமக்கள் அனைவருக்கும் கஷ்டமும் உயிருக்கும் உடலுக்கும் பெரும் ஆபத்தும் ஏற்பட்டிருக்கிறது

ஜனாதிபதிக்குத் தந்தி மூலம் அனுப்பி வைக்கப்பட்டிருக்கும் சங்கத் தீர்மானத்தில் இப்படித் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

### ஒருமித்த குரலில் முஸ்லிம்கள்

யாழ்ப்பாணம், ஜன. 21

யாழ்ப்பாணம் கோட்டையை விட்டு இராணுவத்தை அப்புறப் படுத்த வேண்டும்.

கோட்டையைச்சுற்றிப் பாதுகாப்பு வலயம் பிரகடனப் படுத்தப்பட்டதை இரத்துச் செய்ய வேண்டும்.

யாழ்ப்பாணம் முஸ்லிம்கள் ஒருமித்த குரலில் இப்படிக் கோரிக்கை விடுத்திருக்கிறார்கள்.

தமது கோரிக்கையை இலங்கை ஜனாதிபதி, பந்தோபஸ்து அமைச்சர்,

(4 ஆம் பக்கம் பார்க்க)

## கொடுப்பனவு கட்டளைக்கும் ரயில் டிக்கெட் பெறலாம்

யாழ்ப்பாணம், ஜன. 21

ரயில்வே பிரதம கணக்காளர் பெயருக்கு வங்கியில் இருந்து கொடுப்பனவுக்கட்டளை(பே-ஓடர்) எடுத்துக்கொடுத்தாலும் யாழ் ரயில் நிலையத்தில் டிக்கெட்டுக்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

கோட்டை முகாமிற்கு அருகில் உள்ள ரயில் டிக்கெட் வழங்கும் நிலையத்தில் நேற்று கடமையாற்ற ஊழியர்கள் எவரும் போகவில்லை.

இதன் காரணமாக, பணம் கொடுத்து டிக்கெட் பெறும் ரயில் பயணிகள் நேற்று திக்குமுக்காடினர்.

மணியோர்டர் எடுக்கவும் அவர்களால் முடியவில்லை.

தபால் நிலையத்தின் மணியோர்டர் வழங்கும் பிரிவும் கோட்டையில் இயங்காததே இதற்குக காரணம்.

இந்த நிலையில் ரயில் பயணிகள் எப்படி டிக்கெட டுக்களைப் பெற்றுக் கொள்வது?

வங்கியில் இருந்து ரயில்வே பிரதம கணக்காளர் என்ற பெயருக்கு கொடுப்பனவுக் கட்டளை கொண்டு வந்தால் ரயில் நிலையத்தில் வைத்து டிக்கெட் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

### பை, பொதி கொண்டு போக முடியாது

கொழும்பு, ஜன 21

கோட்டை இராணுவ முகாம் பகுதியிலிருக்கும் வங்கிக்கிளை, தபால்கந்தோர் பிரிவு ஆகியவற்றிற்குச் செல்வோர் தம்முடன் பை, பொதிகள் எதனையும் எடுத்துச் செல்ல அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்கள் இந்தத் தகவலைத் தெரிவித்தன.

### முச்சந்திமுரளி



ஐயோ, புத்த தர்மமே! ஆடு, மாடுகளைச் சுடுவது போலத் தமிழனைச் சுட்டு, லொறிகளில் ஏற்றுவதுதான் உனது தார்மீக நெறியா? அதுவும் ஒரு சரித்திரமாகலாம்!...

பாதுகாப்பு வலயம் வந்த பின்னர்.....

# யாழ். நகரில் நேற்று பதற்றம்

## மக்கள் கிலி கொண்டு ஓட்டம்; அலுவலகங்கள், பாடசாலைகட்கு வரவு குறைவு

— அலுவலகச் செய்தியாளர் வனிதராஜன் —

யாழ்ப்பாணம்,ஜன.21

நேற்றுக் காலையில் யாழ்நகரில் இடம் பெற்ற சில நிமிட நேரத் துப்பாக்கிப் பிரயோகம், குண்டுவெடிப்பு என்பவற்றால் மக்கள் பதற்றம் அடைந்தனர். அதனால் வங்கிகள் உட்பட பல அலுவலகங்களுக்குப் பணியாட்கள் வேலைக்குச் செல்லவில்லை. மாணவரும் பாடசாலை செல்லமுடியவில்லை. சுமார் இரண்டு மணிநேரம் நகரம் சனநடமாட்டம் இல்லாமல் வெறிச்சோடிக் கிடந்தது.

பாதுகாப்பு வலயம் வந்த பின்னர் இடம் பெற்ற முதலாவது பதற்றச் சூழ்நிலை இதுவாகும்.

அந்தச் சம்பவம்பற்றி அறிய வருவதாவது:-

நேற்றுக் காலை சுமார் 7.15மணியளவில் யாழ்ப்பாணம் சுப்பிரமணியம் பூங்காவிற்கு முன்னால் இருந்து கோட்டை முகாம் பகுதியை ஒரு வெளிநாட்டுத்த..பதிகள் புகைப்படம் எடுத்தனர். அப்பொழுது கோட்டை முகாமிலிருக்கும் ஆயுதப் படையினர் அவர்களை அவதானித்துவிட்டு முகாமிலிருந்து வெளியே வர முயற்சித்தனர்.

அப்படி முகாமிலிருந்து கோட்டைக்கு வெளியே வர முயற்சிக்கும்பொழுது பலத்த குண்டு வெடிப்புச் சத்தங்கள் கேட்டன. குண்டு வெடிப்புச் சத்தத்தைத் தொடர்ந்து ஆயுதப்படையினர் சுட ஆரம்பித்தனர். இதனைத் தொடர்ந்து ஆயுதப்படையினரை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டது. குண்டுகள் தொடர்ந்து வெடித்தன.

கோட்டை முகாமிலிருந்தும் துப்பாக்கி வேட்டுக்கள் யாழ் நகரை நோக்கி வர ஆரம்பித்தன.

இச்சம்பவங்களின் போது வேம்படி மகளிர் பாடசாலைக்கு முன்னால் உள்ள வீதியில் வெடித்த

(4 ஆம் பக்கம் பார்க்க)

மாற்று யோசனைக்கு

# பதில் கிடைக்கும் வரை பேச்சுவார்த்தை இல்லை

## சென்னையில் கூட்டணி அறிக்கை

சென்னை, ஜன.20

ஏதுமறியாத அப்பாவித் தமிழர்களைக் கொன்று குவிப்பதை இலங்கை அரசு கைவிட்டு நாம் சமர்ப்பித்த யோசனை குறித்து ஆக்கபூர்வமான பதில் தர வேண்டும்.

அதுவரை இலங்கை அரசுடன் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ நாம் பேசும் சாத்தியம் எதுவும் இல்லை.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் அரசியல் குழு (பொலிட் பீரோ) திங்களன்று சென்னையில் விடுத்த அறிக்கை ஒன்றில் இப்படித் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை தமிழர் பிரச்சினைகளில் ஏற்பட்டுள்ள முட்டுக்கட்டைகளை முடிவுக்குக் கொண்டுவர முயற்சிகள் எடுக்குமாறு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் திரு. நீலன் திருச்செல்வத்தையோ அல்லது வேறு எவரையோ தமிழர் விடுதலைக் கூட்டணி அங்கீகரிக்கவில்லை என்றும் —

அப்படி வந்த செய்தி

(4ஆம் பக்கம் பார்க்க)

### சுபநேரம்

21.1.1986
செவ்வாய்க்கிழமை
சுடநேரம்:
11.05 முதல் 12.35 வரை
ராகுகாலம்:
3 35 முதல் 5.05 வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்
ஏகாதசி விரதம்

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திரையிலும் மேடையிலும் ஜெய்கணேஷின் அனுபவம்

ஜெய்கணேஷ் ஆரம்பத்தில் நாடகத்துறையில் புகுந்து மிகப் பிரபல்யம் பெற்றார். அதன்பின் திரைப்பட உலகில் புகுந்து அங்கும் தனக்கென ஓர் இடத்தைப் பிடித்து வைத்திருந்தார்.

இப்பொழுது மீண்டும் தன் தாய்வீடான நாடகத்திலும், சினிமாவிலும் தொடர்ச்சியாக நடித்து வருகிறார்.

ஜெய்கணேஷ் தன் நாடக உலக அனுபவங்களை இங்கு குறிப்பிடுகிறார்:

தினசரி சினிமா

"என்னுடைய ஏழாவது வயதில் முதன் முதலில் நாடகங்களில் நடிக்க ஆரம்பித்தேன். "மருது பாண்டியன்" என்ற நாடகத்தில், மருது பாண்டியனின் சகோதரர் மகனாக தமிழரசு வேடத்தில் நடித்தேன்.

அன்றிலிருந்து இன்றுவரை நாடகமும் சினிமாவும் எனது இரு கண்களாகவே இருக்கின்றன.

எனக்கு வயது முப்பத்தெட்டு ஆகிறது. இதில் முப்பத்தொரு வருடங்கள் மேடை அனுபவம் உண்டு.

இரண்டாயிரத்திற்கும்மேல் மேடையேறி இருக்கிறேன். சுமார் 25 நாடகங்களில் நடித்திருக்கிறேன். இதில் ஐந்து நாடகங்களை நானே தயாரித்து, நடித்தும் உள்ளேன்'' என்றார்.

"சினிமா நடிகர்கள் நடித்தால் தான் நாடகங்கள் வெற்றி அடைகின்றன'' என்று கூறப்படுவது குறித்து அவர் கூறுகையில்,

"நல்ல நாடகமாக இருந்தால் நிச்சயம் வெற்றியடையும். அதில் சினிமா நடிகர்கள் நடித்தால், வசூல் ஓரளவு அதிகமாகத்தான் இருக்கும்.

ஆனால் சென்னை பொறுத்தவரையில் தென் சென்னையில் யார் நாடகத்தைப் போடுகிறார்கள்? அதில் சினிமா கலைஞர்கள் இருக்கிறார்களா என்று எல்லாம் பார்ப்பதில்லை.

அதேசமயம் வட சென்னையில் திரைப்பட நடிகர்கள் இருந்தால்தான் நாடகங்கள் போடப்படுகின்றன.

எல்லாவற்றிலுமே விதிவிலக்குகள் இருக்கின்றன. நல்ல நாடகமானால் எந்த இடத்திலும் நிச்சயம் வெற்றி பெறும்'' என்றார்.

### திருட்டுத்தனமாக வீடியோ பார்க்கின்றார்கள்

மாஸ்கோ, ஜன. 20

வீடியோ கழகங்கள் சட்ட விரோதமாக ரஷ்யாவில் இயங்குகின்றன.

இதனை எப்படித் தடுப்பது என்பதில் ரஷ்ய அதிகாரிகள் தீவிர பரிசீலனை மேற்கொண்டுள்ளனர்.

அரச தணிக்கைக்குச் சவால் விடுவது போன்று, தடை செய்யப்பட்ட படங்களை வீடியோக் கழகங்கள் மூலம் ரஷ்யர்கள் பார்க்க முடிகின்றது.

### மெனுகுவா வாஷிங்டன் பேச்சு

மெனுகுவா, ஜன 30

மெனுகுவாவுக்கும் வாஷிங்டனுக்கும் இடையில் சமரசத் தீர்வுக்கான பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்க வேண்டும்.

இவ்வாறு நிகரகுவா அரசு தனது விருப்பத்தை ஐ. நா. சபையிடம் தெரிவித்துள்ளது.

# லெஸ்ஸத்தோவில் இராணுவ புரட்சி

## பிரதமர் ஜோனதனின் அரசு கவிழ்ப்பு

லண்டன், ஜன. 20

லெஸ்ஸத்தோவில் ஏற்பட்ட திடீர் இராணுவப் புரட்சியில் பிரதமர் ஜோனதனின் அரசு கவிழ்க்கப்பட்டு விட்டது. லெஸ்ஸத்தோ தென்னாபிரிக்காவுக்கு மத்தியில் உள்ள ஒரு சிறிய நாடு.

இராணுவப் படைகளின் தலைவர் எனக் கருதப்படும் மேஜர் ஜெனரல் லெகன்யான் அரசு பொறுப்பை ஏற்றுள்ளார்.

அவர் புதிய இராணுவ சபையின் தலைவராக இருப்பார் என லெஸ்ஸத்தோ வானொலி அறிவித்ததாக செய்திகள் தெரிவித்துள்ளன.

மன்னர் இரண்டாவது மோட்ஜின் அரசு தலைவராக இருப்பார் எனவும் மேலும் அறிவிக்கப்பட்டுள்ளது.

தலைமைச் செயலாளர்கள் அமைச்சுக்களைத் தற்காலிகமாக நடத்திச் செல்வார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### கங்கையில் படகுகவிழ்ந்தது 75 பேர் மரணம்

புதுடில்லி, ஜன 20

கங்கையில் படகு கவிழ்ந்ததில் 75 பேர் வரை மாண்டனர் என்று அறிவிக்கப்பட்டது.

கங்கா சாதர் என்ற இடத்திற்குச் சென்ற பக்தர்களே இப்படி கங்கையில் மூழ்கி இறந்தனர்.

## கம்பாலாவில் மீண்டும் கலவரம்

### மாதா கோயில்களில் மக்கள் அடைக்கலம்

கம்பாலா, ஜன. 20

உகண்டா தலைநகர் கம்பாலாவில் மீண்டும் சண்டைகள் தொடங்கியுள்ளன.

நகரின் பல இடங்களிலும் பரவலாக அரசு துருப்புகளும் கிளர்ச்சிப் படைகளும் மோதிக் கொண்டதாகச் செய்திகள் தெரிவித்துள்ளன.

இந்தச் சண்டைகளால் பாதிக்கப்பட்ட மக்கள் மாதா கோயில்களில் அகதிகளாக அடைக்கலம் புகுந்துள்ளார்கள்.

சில மாதங்களுக்கு முன் இரு தரப்பாரும் சண்டை நிறுத்த உடன்படிக்கை ஒன்றை செய்திருந்தனர்.

இது கடந்த வெள்ளிக்கிழமை மூண்ட கலவரங்களால் முதன் முறையாக மீறப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

கம்பாலா கலவரங்களையடுத்து பல ஆயிரக்கணக்கான கென்யா பிரஜைகள் கம்பாலாவை விட்டு வெளியேறி விட்டனர்.

ஆயுதம் தாங்கிய துருப்புகளின் அட்டகாசமே இதற்குக் காரணமாகக் கூறப்படுகிறது.

துருப்புகள் துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்தபடி நகருக்குள் முன்னேறிச் சென்றதாக மேலும் செய்திகள் தெரிவித்தன.

இந்த தாக்குதலுக்கு யார் பொறுப்புஎன தெரிவிக்கப்படவில்லை.

எனினும் இந்த நேரத்தில் 'என ஆர் ஏ' என்ற தேசிய போராட்ட இராணுவம் அரச நிறுவனங்கள் பலவற்றின் மீது தாக்குதல் மேற்கொண்டிருந்ததாக உகண்டா அதிபர் தெரிவித்துள்ளார்.

இதற்கிடையில் கென்யா அதிபர் டானியல் அரப் மொய் போராட்டத்தை நிறுத்துமாறு தேசிய போராட்ட இராணுவத்துக்கு விண்ணப்பித்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

உகண்டாவின் முழு மக்களுமே சமாதானத்துக்கான பேராவலுடன் இருப்பதாக அவர் தனது வேண்டுகோளில் மேலும் தெரிவித்துள்ளார் எனவும் அந்தச் செய்திகள் தெரிவித்தன.

எனினும் தலைநகரில் தானியங்கி ஆயுதங்களின் சத்தங்கள் ஆட்சிக் கவிழ்ப்பின் பின்னர் கேட்டதாக செய்திகள் தெரிவித்தன.

## வெளி உலகில்

# பஞ்சாப்-ஹரியானு எல்லையில் பதற்ற நிலை

### ஹரியானுவில் 500 பொலீஸார் உஷார்

புதுடில்லி, ஜன 20

பஞ்சாப் — ஹரியானு மாநிலங்களின் எல்லைப் புறத்தில் பதற்றநிலை அதிகரித்து வருகின்றது.

ஹரியானு மாநில முதலமைச்சர் பஜன்லால் 500 பேர் கொண்ட பொலீஸ் படை ஒன்றை பஞ்சாப் மாநில எல்லைக்கு அனுப்பிவைத்துள்ளார்.

பஞ்சாப் மாநிலத்தில் உள்ள 54 கிராமங்களில் சனத்தொகை கணக்கெடுப்பு நடைபெறுவதை ஒட்டியே இப்பாதுகாப்பு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பஞ்சாப் மாநில முதலமைச்சர் சுர்ஜித்சிங் பர்னுலா ஹரியானு முதல்வரின் நடவடிக்கையை 'யுத்தப் பிரகடனம்' என்று குற்றம் சாட்டியுள்ளார்.

"சீக்கியர்களின் நலன் கருதி எந்த நிர்ப்பந்தத்தையும் தாக்குப் பிடிக்க நாம் நடவடிக்கை எடுப்போம்'' — இப்படி பஞ்சாப் மாநில முதலமைச்சர் சொன்னார்.

பஞ்சாப் மாநிலத்தில் உள்ள 54 கிராமங்கள் ஹரியானு மாநிலத்திடம் ஒப்படைக்கப்பட இருக்கின்றன.

சண்டிகார் நகரில் ஹரியானு மாநிலத்துக்குள்ள உரிமை பஞ்சாபுக்கு கைமாறுவதற்குப் பதிலாகவே இந்த நடவடிக்கை.

இதனால்தான் பதற்றம் அதிகரித்துள்ளது.

### பிலிப்பீன்ஸ் தேர்தல்

## இராணுவத்தை நடுநிலைமை வகிக்க செய்ய முயற்சி

மணிலா, ஜன. 20

பிலிப்பீன்ஸ் இராணுவத்தின் நடுநிலைமையைப் பேண இராணுவத் தளபதி பேபியன் வெர் நடவடிக்கை எடுத்துள்ளார்.

இராணுவத்தில் உள்ள அதிகாரிகள் எவரும் அரசியல் அறிக்கைகள் எதையும் வெளியிடக்கூடாது என்று இராணுவத் தளபதி உத்தரவிட்டுள்ளார்.

இராணுவ அதிகாரிகள் குழு ஒன்று, எதிரணி ஜனதிபதி வேட்பாளர் திருமதி அக்கியூனே வென்றால் அவருக்கு ஆதரவு அளிப்போம் எனறு விடுத்த அறிக்கையைத் தொடர்ந்தே, இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

பிலிப்பீன்ஸ் ஜனதிபதி தேர்தல் பெப்ரவரி 7ஆம் திகதி நடைபெற உள்ளது.

### தவறுதலாக வெடித்த துப்பாக்கி

யாழ்ப்பாணம், ஜன. 21

தற்செயலாகத் துப்பாக்கி வெடித்ததினால் முகத்தில் படுகாயமடைந்த நிலையில் வவுனிக்குளத்தைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார்.

இவர் வயலில் பன்றிகளுக்கு காவலாக இருந்தபோது துப்பாக்கி தவறுதலாக வெடித்ததாகக் கூறப்படுகிறது.

காயமடைந்தவரின் பெயர் செல்லன் சிவலிங்கம் – வயது 31.

### பனம் பொருள்

## உற்பத்திக்கு ஊக்கமளிக்க விசேட போதனைத் திட்டம்

### சபைத் தலைவர் கூறுகின்றார்

சாவகச்சேரி, ஜன. 21

ஏற்றுமதிக்கு வாய்ப்பான பனம் பொருள்களின் உற்பத்திக்கு பனம் பொருள் அபிவிருத்திச் சபை ஊக்கமளிக்கும்.

இதன் அடிப்படையிலேயே கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன் கல்விமூலவள நிலையங்களில் பனம்பொருள் பயிற்சி போதனை திட்டம் செயற்படுத்தப்படுகிறது.

இவ்வாறு பனம் பொருள் அபிவிருத்திச் சபையின் தலைவர் திரு. க. நடராசா கூறினார்.

கைதடி வெளிக்கள நிலையத்தில் பனம்பொருள் உற்பத்திப் பயிற்சியை தைப்பொங்கல் தினத்தன்று அவர் ஆரம்பித்து வைத்தார்.

மூலவள நிலையத் தலைவர் திரு. க. சிவபாதசுந்தரம் இவ்வைபவத்திற்குத் தலைமை வகித்தார்.

திரு. நடராசா அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில், இன்றைய காலகட்டத்தில் பனை மூலவளத்தைத் தக்கமுறையில் விஞ்ஞானக் கண்ணோட்டத்துடன் பயன்படுத்தவேண்டும் என்றார்.

இதுவரை சுமார் 4000 பேருக்கு உற்பத்திப் பயிற்சி அளித்துள்ளோம். வெளிக்கள நிலையங்களில் மட்டுமன்றி தொழில்நுட்பக் கல்லூரிகளிலும் தரமான பயிற்சிகளைப் பெற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்றார்,

பனம்பொருள் அபிவிருத்திச் சபையின் பொது முகாமையாளர் திரு. சி. மோகனதாஸ் திரு. சி. பரநிருபசிங்கம் ஆகியோர் சிறப்புரைகள் வழங்கினர்.

### யாழ். ரயில்சேவை

## கோட்டைவரை நீடிக்க கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜன 21

யாழ்ப்பாணம் ரயில் சேவையை பயணிகள் நலன்கருதி கோட்டைவரை நீடிக்கச் செய்ய வேண்டும்.

இப்படி வடபிராந்திய பயணிகள் நலன் புரிச் சங்கம் இலங்கை ரயில்வே பொதுமுகாமையாளரிடம் விண்ணப்பித்துள்ளது.

சங்கத் தலைவர் திரு. எஸ். குமாரசாமி பொது முகாமையாளருக்கு எழுதியுள்ள கடிதத்தில் இப்படித் தெரிவித்திருக்கிறார்.

யாழ் ரயில் பயணிகளைப் பொறுத்தவரை மருதானையிலும் விட கோட்டை பாதுகாப்பானது. வெளிநாடு செல்லும் யாழ் இளைஞர்கள் மருதானையில் இறங்கி உடைமைகளைப் பறிகொடுக்கின்றனர்.

இரவு நேரத்தில் யாழ் ரயில் மருதானைக்குச் செல்வதால் இக்கஷ்டம் ஏற்படுகின்றது. ஆகவே யாழ் ரயில்சேவையை கோட்டைவரை நீடியுங்கள்—இப்படி கடிதத்தில் கூறப்பட்டுள்ளது.

## இராணுவ முகாம் தொண்டாவின் தொகுதியில்

### ஈரோஸ் கூறுகிறது

சென்னை, ஜன. 20

நாடற்றவர்கள் சம்பந்தமாக இந்திய அரசுடன் உடன்படிக்கை செய்து கொண்டதைத் தொடர்ந்து மத்திய மாகாணத்தில் உள்ள தோட்டப் பகுதிகளில் இரண்டு இராணுவ முகாம்கள் திறக்கப்பட்டிருக்கின்றன.

ஈழப்புரட்சி ஸ்தாபனம் சென்னையில் இதனை அறிவித்திருக்கிறது.

கிராமக் கைத்தொழில் அமைச்சர் திரு. எஸ். தொண்டமான் இதற்கு தனது எதிர்ப்பைத் தெரிவித்திருந்தும் கூட அவரது தொகுதியிலேயே இந்த முகாம்கள் அமைக்கப்பட்டிருப்பதாக ஸ்தாபனத்தின் சார்பில் திரு. வி. பாலகுமார் தெரிவித்தார்.

மினி சினிமா

புதிய வெளியீடு
நவா மினி
(உஷாமினி முன்பாக)
டாங்கிகளை, இராணுவ முகாம்களைத் தகர்த்தல்.
சிறை மீட்டல்
BATTLE of BLOOD
சிறந்த படம்

## மாநிலம்-மாவட்டம்-உள்ளூர்

# இருள் சூழ்ந்த இந்த வேளையில் தொண்டர் தொகை போதாது

### மானிப்பாய் மறுமலர்ச்சி மன்ற கூட்டத்தில் உரை

யாழ்ப்பாணம், ஜன 21

அழுகுரல்களும் அவலக் குரல்களும் பெருகி உள்ள இருள் சூழ்ந்த இவ்வேளையில் மக்கள் சேவைக்குத் தம்மை அர்ப்பணிக்கும் தொண்டர்கள் எண்ணிக்கை போதாது.

மானிப்பாய் மறுமலர்ச்சி மன்றத்தின் 23 ஆவது ஆண்டுப் பொதுக்கூட்டத்தில் செயலாளர் திரு. செ. யோ. செல்வராசா இவ்வாறு கவலை தெரிவித்தார்.

மன்றத் தலைவர் திரு. பி. செல்வரத்தினம் பேரவை நிகழ்ச்சிகளுக்குத் தலைமை வகித்தார்.

திரு. செல்வராசா தொடர்ந்து கூறியதாவது:–

நாட்டின் இருள் சூழ்ந்த வேளையில் மக்கள் பாதுகாப்பற்று பொருளாதார சமூக நெருக்கடியில் சிக்கி திணறிக் கொண்டு இருக்கிறார்கள்.

நாலா புறத்தும் அவதிப்படும் மக்களின் அவலக்குரல்கள், மரண ஓலம், கல்விச் சீர்கேடுகள் போக்குவரத்து இடையூறுகள் நிறைந்துள்ள சூழலில் வாழ்கிறோம்.

இத்தகைய காலத்தில் சேவைக்கான குரல்கள் பல்திக்கிலிருந்தும் ஒலித்த வண்ணம் இருக்கின்றன.

ஆனால் பதில் குரல்கள் பலவீனமாக பதிலிறுக்கின்றன. இது வேதனை தரும் சம்பவம்.

இவ்வாறு அவர் கூறினார்.

## ரயில் மோதி ஐவர் மரணம்

கொழும்பு, ஜன 21

பொல்காவல ரயில் நிலையத்துக்கு அண்மையில் ரயில் மோதி 5 பேர் மரணமானார்கள்.

4 பேர் பெண்கள். ஒருவர் ஆண்.

பதவியாவில் இருந்து மரணச்சடங்கு ஒன்றில் கலந்துகொள்ள இவர்கள் வில்வத்தை என்ற இடத்துக்கு வந்தார்கள்.

சுரங்க ரயில் பாதை ஊடாகச் செல்லும் போது சரக்கு ரயில் ஒன்று இவர்களை மோதியது.

வெள்ளி இரவு இச்சம்பவம் இடம்பெற்றது.

## சைவசமய தீட்சை

யாழ்ப்பாணம், ஜன. 21

தைப்பூச தினத்தன்று சமயதீட்சை வைக்கும் சமய ஸ்தாபனங்கள், தொண்டர் சபைகள், ஆலயங்கள், ஆறுமுக நாவலர் அருளிய சமய அனுட்டான விதியை தமது செலவு அனுப்பி விண்ணப்பம் செய்து பெற்றுக்கொள்ளலாம்.

மில்க்வைற் சவர்க்கார [illegible] என்றவாறு அறிவித்துள்ளது.

## வடக்கு, கிழக்கில் கொல்லப்பட்ட முஸ்லிம்கள் விவரம்

நல்லூர், ஜன. 21

கடந்த காலங்களில் ஊர்காவல் படையினராலும், இராணுவத்தினராலும் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் சுட்டுக் கொல்லப்பட்ட முஸ்லிம்களின் பெயர்ப்பட்டியலை முஸ்லிம் மக்கள் பாதுகாப்பு பேரணி யாழ்ப்பாணத்தில் ஒட்டி உள்ளது.

எமது மக்களுக்கு எதிரான அடக்கு முறைகள் தொடருகின்றன என்ற தலைப்பில் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

14-10-85 இல் மூதூரில் ஊர்காவல் படையினராலும், இராணுவத்தினராலும் படுகொலை செய்யப்பட்டோர் விவரம்.

1. ஜனுப். சேதுமுகமட் (48 வயது) 2. ஜனுப். [illegible] (28 வயது) 3. மஸ்தான் [illegible] (18 வயது) 4. ஜனுப். முகமட் சவ்றீஸ் (21 வயது)

7-10-85இல் மன்னார் உயிலங்குளத்தில் ஆறு முஸ்லிம்கள் பலியானார்கள்.

(பெயர்கள் தெரிவிக்கப்படவில்லை)

5-1-86 இல் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற சம்பவத்தின் போது;

1. ஜனுப். பி. நவாபி (16 வயது) 2. ஜனுப். மஸ்கின் சாகிட் 3 ஜனுப் ஏ. எம் நிசார் 4. ஜனுப் கமால்தீன் மிதுருஜ் 5. சேயினம்பு ஆகியோர் மரணமானார்கள்.

ஜனுப் நசுல்தீன் படுகாயம் அடைந்தார்.

16-1-86இல் யாழ்ப்பாணத்தில் நடந்த சம்பவத்தில் 1. அப்துல் கமீட் (20 வயது) 2. காமில் அருஸ் (33 வயது) மரணமானார்கள்.

ஜனுப். யூசுப் (22 வயது) படுகாயமடைந்தார்.

### குமாரசாமி வீதியில் கொள்ளை

நல்லூர், ஜன. 21

நல்லூர் உதவி அரசாங்க அதிபர் திரு எஸ். சிவகுருநாதன் வீட்டில் கொள்ளையிடப்பட்டிருக்கிறது.

குமாரசாமி வீதியில் உள்ள அவரது வீட்டிற்கு சென்ற இனந்தெரியாதவர்கள் வீட்டை உடைத்துப் பட்டப்பகலில் கொள்ளையடித்தனர்.

வீட்டில் அன்றைய தினம் யாரும் இருக்கவில்லையாம்.

நகை, ரொக்கப்பணம் ஆகியவையே கொள்ளையிடப்பட்டிருக்கின்றன.

### முஸ்லிம்கள் விவரம் கேட்கப்படுகிறது

யாழ்ப்பாணம், ஜன. 21

யாழ் மாவட்டத்திற்குத் தொழில் புரியும் நோக்கத்திற்காகவும், கல்வி கற்பதற்காகவும் வந்துள்ள வெளி மாவட்டங்களைச் சேர்ந்த முஸ்லிம்கள் அனைவரும் தங்கள் புகைப்படத்துடன் அவர்களைப் பற்றிய முழு விவரங்களையும் தருமாறு இஸ்லாமிய மக்கள் பாதுகாப்பு அமைப்பு கேட்டிருக்கிறது.

இந்த நடவடிக்கை அவர்களின் நன்மை கருதியே எடுக்கப்பட்டுள்ளது என்று அமைப்பு தெரிவித்தது.

### கோப்பாயில் பொலிகிளினிக்

யாழ்ப்பாணம், ஜன. 21

கோப்பாய் லயன்ஸ் கழகம், மூன்று பாடசாலைகளில் 'பொலிகிளினிக்' நடத்த நடவடிக்கை எடுத்து உள்ளது.

இன்றும் நாளையும் இந்த கிளினிக் நடைபெறும்.

கிறிஸ்தவக் கல்லூரி, சரவணபவானந்த வித்தியாலயம், கோப்பாய் மகாவித்தியாலயம் ஆகியவற்றில் சகல நோய்களுக்குமான பரிசோதனைகள் நடத்தப்படும்.

300 மாணவ, மாணவிகள் வைத்திய பரிசோதனைக்கு உட்படுத்தப்படுவர் என்று லயன்ஸ் கழகத்தின் செயலாளர் திரு. எஸ். சண்முகேந்திரன் சொன்னார்.

### மக்கள் முகம்

#### ஓய்வு பெறுகிறார்

யாழ்ப்பாணம், ஜன. 21

கோண்டாவில் மகா வித்தியாலய அதிபராகக் கடமை ஆற்றிய திரு. வி நடராசா முப்பத்தைந்து ஆண்டு சேவையின் பின் ஓய்வு பெறுகிறார்.

இவர் இலங்கைக் கல்விச் சேவையில் ஐந்தாம் தரத்தில் கடமை புரிந்தார்.

திருகோணமலை இந்துக் கல்லூரி, கரவெட்டி சேக்கரட் கார்ட்ஸ் கல்லூரி, வடசென்ரல் கல்லூரி, தொண்டமானாறு மகாவித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் அதிபராகக் கடமையாற்றி உள்ளார்.

உதய சங்கற்பம்

யார்க்கும் எளியனாய், யார்க்கும் வலியனாய், யார்க்கும் அன்பனாய், யார்க்கும் இனியனாய் வாழ்ந்திட வேண்டும்.

-- மகாகவி பாரதியார்.

உதயன்
உண்மை - அஞ்சாமை - நடுநிலைமை
இல: 15, 2வது ஒழுங்கை
மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 2480
22073
21-01-86
உ. பெ. 23

# எம்மில் எத்தனை பேர் அதற்குத் தயார்?

யாழ்ப்பாண நகரில், மக்கள் செயலூக்கக் குழுவின் கூட்டம் ஒன்று கடந்த ஞாயிற்றுக் கிழமை நடைபெற்றது. மக்கள் வாழும் பகுதிகளில் அமைந்திருக்கும் இராணுவ முகாம்களைச் சுற்றிப் பாதுகாப்பு வலயம் அமைக்கப்பட்டதால் ஏற்படக் கூடிய பேராபத்துக் குறித்து அந்தக் கூட்டத்தில் ஆராயப்பட்டது.

செயலூக்கக் குழுக் கூட்டத்தில் பல பிரமுகர்களும் எடுத்துரைத்த கருத்துக்கள், கவனத்துக்கு எடுக்கப்பட வேண்டியவை. பல திசைப்பட்ட அபிப்பிராயங்கள் அங்கு முன் வைக்கப்பட்டன.

இன்றுள்ள இக்கட்டான நிலையில் மக்களின் மனோநிலை எப்படி இருக்கிறது என்பதை அந்தக் கருத்துக்கள் பிரதிபலித்தன.

மக்கள் போராட்டம் ஒன்றின் மூலம் உரிமைகளை வென்றெடுக்க வேண்டும் என்ற உணர்வு மக்களுக்குப் பிறந்திருப்பதைக் காண முடிந்தது.

'கூட்டத்திற் கூடி நின்று கூவிப் பிதற்றல் அன்றி நாட்டத்திற் கொள்ளாரடீ கிளியே-! நாளில் மறப்பாரடீ'- என்று புதுமைப் புலவன் பாரதி கூறியதை எழுத்துக்கு எழுத்து நிரூபிப்பவர்கள் எம்மவர். இதனை நம்மில் யாரும் மறுக்க முடியாது.

எமது உரிமைகளை வேறு யாரும் எமக்குப் பெற்றுத்தர முடியாது. பிறரை நம்பிக் காலத்தைக் கழிக்கவும் கூடாது. எமக்கும் அதில் பங்கு உண்டு என்று சொல்வதை விட அது எமது கடமை என்பதே பொருத்தமானதாகும். உரிமைகளை வென்றெடுக்கத் தம்மால் முடிந்ததை ஒவ்வொருவரும் செய்ய வேண்டும் என்ற உணர்வு வந்திருப்பதே ஒரு நல்ல அறிகுறி என்று கொள்வோமாக.

''அப்ளாஸ்'' வாங்குவதற்காகக் கூட்டத்தில் பேசிவிட்டு வீட்டில் ஒடுங்கிக் கிடக்கும் நிலை இனி இல்லை. இதனை ஒவ்வொரு தமிழனும் உணர வேண்டும்.

பாதுகாப்பு வலயங்கள், பீரங்கிப் பிரயோகம் என்பன தமிழினத்தை அழிக்கும் திட்டத்தின் உச்சக்கட்டம். இதனை 18.1.1986 ஆம் திகதிய உதயனில் இதே பத்தியில் விளக்கியிருந்தோம்.

நாம் தொழிலில் ஈடுபட்டிருந்தாலும் சரி, வீட்டில் இருந்தாலும் சரி, வீதியால் நடந்து சென்றாலும் சரி பீரங்கிக் குண்டு அல்லது துப்பாக்கியிலிருந்து சீறிப் பாயும் குண்டு எமது உயிரை எந்த நேரமும் குடிக்கலாம் என்ற இறுதிக்கட்ட நிலை வந்துவிட்டது.

அதற்குப் பின்னரும் நாம் வாளா இருந்தால் எமது இனம் அழிவதைத் தடுக்க இயலாத மிகவும் துர்ப்பாக்கியமான, கவலைக்குரிய நிலை ஏற்பட்டுவிடும். அதற்கு நாம் இடங்கொடுக்கலாமா?

வேறு எந்தச் சந்தர்ப்பத்தையும் விட, இப்போதுதான் எமக்கு வீரமும் துணிவும் விவேகமும் தேவை. அந்தத் தேவை ஓரளவாவது உணரப்பட்டிருப்பது மகிழ்ச்சிக்கு உரியது என்றே சொல்லத் தோன்றுகிறது.

அந்த உணர்வு வளர்க்கப்பட வேண்டும். மக்கள் போராட்டம் ஒன்றை முன்னெடுத்து முன்னேறும் நிலைமை உருவாக வேண்டும்.

அப்போது தான் எம்மையும், எமது வழித்தோன்றல்களையும் நாம் பாதுகாக்க முடியும். சுய பாதுகாப்பு இல்லையேல் ஒரு மனிதனுக்கு உலக வாழ்க்கை ஏது?

செயலூக்கக் குழுக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது போல மக்கள் படை ஒன்று நிராயுதபாணிகளாகக் கோட்டை இராணுவ முகாம் முன்னால் சத்தியாக்கிரகம் செய்யலாம்.

உள்நாட்டில் நடக்கும் கூட்டங்களில் மட்டுமன்றி வெளிநாடுகளில் நடக்கும் சர்வதேச மாநாடுகளிலும் தாம் ஓர் அகிம்சைவாதி என்று கூறிக்கொண்டு புத்தபிரானின் அகிம்சைத் தத்துவம் பற்றி ஜனாதிபதி திரு. ஜெயவர்த்தனா பேசி வருகிறார். ஆகையால் அகிம்சைக்கு அவரும் அவரது படைகளும் கொடுக்கும் மரியாதையை அப்போது உலக நாடுகள் புரிந்து கொள்ளட்டும்.

சத்தியாக்கிரகம் நடத்தவிருக்கும் காலம், நேரம் குறித்து அரசாங்கத்துக்கு முன்னறிவித்தல் கொடுக்க வேண்டும். அதுமட்டுமன்றி இலங்கையில் உள்ள வெளிநாட்டுத் தூதராலயங்களுக்கும் அது குறித்து அறிவிப்பது அவசியம். அவற்றின் பிரதிநிதிகளை அனுப்புமாறும் கேட்கவேண்டும்.

ஒரு நாள் அல்ல இரு நாள் அல்ல தொடர்ச்சியாக சத்தியாக்கிரகத்தை, மறியல் போராட்டத்தை நடத்தினால் ஏதோ ஒரு விளைவு ஏற்பட்டே ஆகும். பல உயிர்கள் பலியாகும் கெட்ட விளைவாக இருந்தாலும் அதனாலும் நன்மை உண்டு. எப்படி?

நிராயுதபாணிகளான தமிழ்ப் பொது மக்கள் பலி எடுக்கப்பட்டார்கள் என்ற செய்தி அகில உலகுக்கும் எட்டும். அதனால் பின்னர் கிடைக்கக்கூடிய பலாபலன்கள் நல்லனவாகவே இருக்கும்.

உயிரைத் துச்சமென மதித்து கோட்டை இராணுவமுகாம் முன் சத்தியாக்கிரகம், மறியல் போராட்டம் நடத்த எம்மில் எத்தனை பேர் தயார்?

# ஒரு நாள் எமக்கு விடிவு வரும்

# இதுவே என் கனவு

### — மார்ட்டின் லூதர் கிங்

> நீக்ரோ மக்கள் தலைவர் கலாநிதி மார்ட்டின் லூதர் கிங் பிறந்த தினம் தேசிய தினமாக அமெரிக்காவில் கொண்டாடப்படுகிறது.
>
> அதனையொட்டி அவர் 1963-ல் ஆற்றிய வரலாற்றுப் புகழ்மிக்க பேச்சை இங்கு தொகுத்துத் தருகிறோம்.

ஒரு நூற்றாண்டுக்கு முன்னர் அமெரிக்க விடுதலைக் கோட்பாடு பிரகடனப்படுத்தப்பட்டது.

அநீதிக்கு ஆளாகியிருந்த நீக்ரோ மக்களுக்கு அமெரிக்க விடுதலைப் பிரகடனம் ஒளிக்கீற்றாக, நம்பிக்கை நட்சத்திரமாக அமைந்தது.

ஆனால் நூற்றாண்டுகள் கழிந்தும் அவன் இன்னும் விடுதலை பெறவில்லை. இன ஒதுக்கல் பாகுபாடு அவனை இன்றும் வதைக்கிறது.

செல்வவளம் என்ற சமுத்திரத்தின் மத்தியிலே அவன் வறுமையாம் தீயில் உழல்கிறான்.

இவ்வெட்கக்கேடான அநீதியை உலகுக்குஎடுத்துக்காட்ட அமெரிக்கத் தலைநகரான வாஷிங்டன் வந்துள்ளோம்.

அமெரிக்க குடியரசை அமைத்த தேசியச் சிற்பிகள் அரசியல் யாப்பையும், சுதந்திரப் பிரகடனத்தையும் எழில்மிகு வாசகங்களில் வெளியிட்டனர். இதனைப் பேணிப் பாதுகாப்பது அமெரிக்க வாரிசுகள் அனைவரதும் கடமை.

சுதந்திரம், வாழ்க்கை, இன்பநாட்டம் ஆகியன மனிதரின் பிறப்புரிமை என்று அமெரிக்க சுதந்திரப் பிரகடனம் பறைசாற்றுகிறது.

வெள்ளையருக்கு மட்டுமன்றி கறுப்பருக்கும் அமெரிக்கக் குடியரசு கொடுத்துள்ள உத்தரவாதம் இது. கறுப்பர்களைப் பொறுத்தவரையில் அமெரிக்கக் குடியரசு இந்த உத்தரவாதத்தைக் கணிக்கத் தவறிவிட்டது.

ஜனநாயகம் அமெரிக்க மக்களின் வாழ்க்கை முறையாக மலரவேண்டும். இனஒதுக்கல் என்ற இருண்ட பள்ளத்தாக்கில் இருந்து இனசமத்துவம் என்ற சூரியோதயத்தை நோக்கி அமெரிக்கா நடைபயில வேண்டும்.

இனஒதுக்கல் என்ற பணற்சேற்றில் புதையும் அமெரிக்க தேசியத்தை சகோதரத்துவம் என்ற கற்பாறையில் அமைக்கவேண்டும்.

எனது மக்களுக்கு ஒரு வார்த்தை. எமக்கு உரிய இடத்தைப்பெற நாம் ஈடுபட்டுள்ள போராட்டத்தில் நாம் தவறுகளைச் செய்யக்கூடாது.

எமது விடுதலைத்தாகத்தைத் தீர்க்கும் அதே வேளையில் வெறுப்பு கசப்புணர்ச்சிகளுக்கு இடமளியாதீர்கள்.

மகத்துவம், கட்டுப்பாடு என்ற அடிப்படையில்போராட்டம்அமைய வேண்டும்..

இன்று பல வெள்ளையர்கள் தமது தலைவிதி எமது நலவாழ்வுடன் பிணைந்து உள்ளது என்பதை உணரத் தலைப்பட்டு உள்ளார்கள். எனவே வெள்ளையர்கள் அனைவரதும் மனக்கசப்பை நாம் சம்பாதிக்கலாகாது. 1963 முடிவு அல்ல. இது ஓர் ஆரம்பம். நீக்ரோக்களுக்கு குடியுரிமை வழங்கும் வரைக்கும் நாம் ஓயப்போவதில்லை. அமெரிக்காவில் அமைதி நிலவப் போவதில்லை. இக்கிளர்ச்சி காரணமாக அமெரிக்கநாட்டின்அத்திவாரம் ஆட்டம் காணப் போகிறது.

நாம் எப்போது திருப்தி அடைவோம் என்று நம்மைக் கேட்கிறார்கள்.

நீக்ரோ மக்கள் பொலீஸாரின் கொடூரத்துக்கு இரையாகும் வரைக்கும், பயணம் செய்து அலுப்படைந்த நீக்ரோ மக்களுக்கு நெடுஞ்சாலைவிடுதிகளில் தங்கும் அனுமதி கிடைக்கும் வரைக்கும், வெள்ளையருக்கு மட்டும் என்ற அறிவித்தல்பலகைகள் கறுப்பினச் சிறுவர்களின் சுயகௌரவத்தை அவமதிக்கும் வரைக்கும், சுருங்கக் கூறினால் அமெரிக்காவில் நீதியும் நேர்மையும் நதி போலப் பெருக்கெடுக்கும் வரைக்கும் நாம் திருப்தியடையப்போவதில்லை. நாம் ஓயப்போவதில்லை.

இப்போது பல துன்பங்களை நாம் முகம் கொடுத்துக்கொண்டு இருப்பினும் ஒருநாளைக்கு விடிவுவருமென்று கனவு காண்கிறேன்.

தோலின் நிறத்தை நோக்காது குண இயல்புகளைக்கொண்டு மக்களைக் கணிக்கின்ற அமெரிக்க சமுதாயத்தில் எனது நான்கு குழந்தைகளும் வாழ்வார்கள் என்று கனவு காண்கிறேன்.

கறுப்பினச் சிறுவர்களும் சிறுமியர்களும்வெள்ளையினச் சிறுவர் சிறுமியருடன் கைகோர்த்து அணிவகுத்துச் செல்வார்கள் என்று கனவு காண்கிறேன்.



பொய்யாமொழி

குறள்:
தெய்வந் தொழா அள் கொழுநன்
தொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை.

பொருள்:
வேறு தெய்வம் தொழாதவளாய்த் தன் கணவனையே தெய்வமாகக் கொண்டு தொழுது துயிலெழுகின்றவள் பெய் என்றால் மழை பெய்யும்.

# மதங்கள் எல்லாம் அன்பையே போதிக்கின்றன

### உலக சமய தினக் கூட்டத்தில் உரை

யாழ்ப்பாணம், ஜன. 21

இன மத வெறி காரணமாகவும் அரசியல் பூசல் காரணமாகவும் பிளவுபட்டுள்ள இன்றைய உலக சமுதாயத்தில் ஒன்றே குலம் என்ற உணர்வும் சமாதானமும் தொனிப் பொருளாக விளங்குகின்றன.

உலக சமய தினக் கூட்டம் ஞாயிறு காலை யாழ். இந்துக் கல்லூரியில் நடைபெற்றது.

பேராசிரியர் சு. வித்தியானந்தன் தனது தலைமையுரையில் இவ்வாறு கூறினார்.

இளைப்பாறிய உணவு கட்டுப்பாட்டு அதிகாரி திரு. கே. சிவப்பிரகாசம் வரவேற்புரை நிகழ்த்தினார்.

யாழ். அரசாங்க அதிபர் திரு. எம். பஞ்சலிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்.

திரு. வித்தியானந்தன் தொடர்ந்து கூறியதாவது :-

சமயங்களிடையே வழிபாட்டு முறைகளில் வேறுபாடு இருப்பினும் அடிப்படையில் அன்பு என்னும் உணர்வு பரந்து காணப்படுகிறது.

அன்பு செலுதல் மூலம் அனைத்து சமய அடியார்களும் யாதும் ஊரே யாவரும் கேளிர் என்ற சமுதாயத்தைக் கட்டி எழுப்ப முடியும்.

பேராசையும் அவநம்பிக்கையும் இன்று மனித குலத்திடையே முரண்பாடுகளையும், பூசல்களையும் வளர்க்கின்றன.

இவ்வாறு திரு. வித்தியானந்தன் கூறினார்.

யாழ். இந்து நாகரிகத் துறைத்தலைவர் பேராசிரியர் கா. கைலாசநாத குருக்கள் பேசுகையில்,

இந்துசமயம் தொன்று தொட்டுப் பேணிக் காத்தது சமயபொறை ஆகும். மனித மனத்தை அலைப்பது தேவையும் அச்சமும ஆகும்

இறை வடிவத்தில் உள்ள அபயகரமும், வரதகரமும், அச்சப்படேல், திருப்திகொள் என்று சுட்டி நிற்கின்றன. வேதகால நூல்களிலகூட உலகளாவிய சிந்தனைகள், ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்ற உணர்வு பரவிக் காணப்படுகிறது.

இப்படி அவர் கூறினார்.

யாழ். மறை மாவட்ட ஆயர் கலாநிதி பி. தியோகுப்பிள்ளை ஆண்டகை பேசுகையில்,

ஒப்புரவும் சமாதானமும் இறைவனிடத்தே இருந்து மலர்பவை தியாகம் சமாதானத்தை சிலுவை பிரதிபலிக்கிறது.

சமூக ஏற்றத்தாழ்வுகள், ஏழை செலவந்தன் என்ற வேறுபாடுகள், இன்று உலகில் பூசல்களைத் தோற்றச் செய்கின்றன என்றார்.

துணைவாரி உறுப்பினர் திரு. க. செ. சுவர்ணராஜ் உட்படப் பலர் உரையாற்றினர்.

# மேற்கு நாடுகளில் இலங்கைத் தேயிலை கொள்வனவு வீழ்ச்சி

கொழும்பு, ஜன. 21

போராளிகள் மேற்கு நாடுகளில் செய்த பிரசாரத்தினால் மேற்கு நாடுகள் இலங்கையில இருந்து 1985 ஆம் ஆண்டு குறைந்த அளவு தேயிலையை வாங்கின.

இப்படி சுங்கத் திணைக்கள அதிகாரி தெரிவித்துள்ளார்.

1985 ஆம் ஆண்டில் மேற்கு நாடுகள் இலங்கையிடம் இருந்து 2 கோடி 80 லட்சம் கிலோ தேயிலையை மட்டுமே வாங்கி உள்ளன.

1985 ஜனவரியில் இருந்து செப்டம்பர் வரை வாங்கப்பட்ட தேயிலையின் தொகை தான் இது.

ஆனால இக்காலத்தில் எகிப்து, சிரியா, ஈராக், சவூதி அரேபியா ஆகிய நாடுகள் 13 கோடி 90 லட்சம் கிலோ தேயிலையை இலங்கையிடம் இருந்து வாங்கின.

மேற்கு நாடுகள் இலங்கைத் தேயிலையை வாங்கத் தயக்கம் காட்டுவதன் காரணம், போராளிகள் மேலை நாடுகளில் மேற்கொண்ட பிரசாரம் தான்.

''இலங்கைத் தேயிலையை வாங்காதீர்கள். அதில் தமிழனின் இரத்தம் கலந்துள்ளது'' இப்படிப் போராளிகள் சுவிட்சர்லாந்து போன்ற மேலை நாடுகளில் பிரசாரம் செய்து வந்தனர்.

இப்படி அந்த அதிகாரி சொன்னார்.

சமய சந்திகளில்

### மஹா கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம், ஜன. 21

புங்குடுதீவு ஸ்ரீ முத்துமாரி அம்பாள ஆலய பஞ்சதள இராசகோபுர மஹா கும்பாபிஷேகம் நாளை 22 ஆம் திகதி புதன்கிழமை காலை நடைபெறும்.

எட்டு லட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்ட இப் பஞ்சதள இராஜகோபுர கும்பாபிஷேகத்திற்கான கிரியைகளும் யாகங்களும் கடந்த 19 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முதல் ஆரம்பமாகின.

பிரதிஷ்டா பூஷணம் சிவஸ்ரீ சுவாமிநாத பரமேஸ்வரக் குருக்கள் பிரதிஷ்டா பிரதம குருவாக இருந்து இக் கும்பாபிஷேகத்தை நடத்தி வைப்பார்.

அன்றைய தினம் வேலணை உதவி அரச அதிபர் செல்வி மைதிலி சோமசுந்தரம், வித்துவான் பொன். அ. கனகசபை, திருமதி வசந்தா வைத்தியநாதன் ஆகியோர் சமயச் சொற்பொழிவாற்றுவார்கள்.

# போராளிகள் அனைவரும் ஒன்றுபட வேண்டும்

### மாமேதை லெனினின் அறிவுரை

''விடுதலையை நாம் போராடியே பெற வேண்டும். முதலாளித்துவ அரசும் அதனைக் காக்கும் ஏவல் நாய்களான கூலிப் பட்டாளத்தையும் நாம் உக்கிரமாக எதிர்க்க வேண்டும். மிருகத்தனமாக தேசபக்தர்களைக் கொன்று குவிக்கும் கூலிப் பட்டாளத்தை முழுமையாக சின்னாபின்னமாக்க சகல போராளிகளும் பேதங்களை மறந்து ஒன்று சேர்ந்து போராடினால் தான் நாம் முழுமையான வெற்றிகளைப் பெற முடியும்''

இவ்வாறு பாட்டாளிகளுக்கு விடிவு தேட வந்த மாமேதை லெனின் கூறினார்.

வர்க்க பேதங்களை ஒழிப்பதன் மூலமே நிலையான ஒரு தொழிலாளர் தலைமையை ஏற்படுத்த முடியும் என எண்ணி சிறு குடிசையில் பிறந்தாலும் மக்களுக்கு சிறப்பான போதனைகளை வழங்கி சாதனை ஏற்படுத்திய தலைவனை இன்று தேசபக்திமிக்க தொழிலாளர்களும் - விவசாயிகளும் - மாணவர்களும் - இனமத பேதமின்றி உலகம் முழுமையும் நினைவு கூருகிறார்கள்.

> மாமேதை லெனின் தினம் இன்று செவ்வாய்க் கிழமை உலகம் முழுவதும் தேசபக்தர்களாலும் போராளிகளாலும் நினைவு கூரப்படுகிறது. அதனையொட்டி இக் கட்டுரை பிரசுரமாகிறது.

தலைவர் லெனின்தனது வாழ்க்கையை கணிதம், பௌதிகம் கற்பக்கும் ஆசிரியராகவே ஆரபபித்தார். தனது பதினாறுவது வயதில் தநதையார் இலியா நிகலயேவிச் உல்யானவ் அவரகளை இழந்தபின் சட்டம் பயின்று சட்டவாதியானார்.

இளைஞனலெனினிடம் எளிமை - சமயோசிதம் வாழ்க்கையின் மீது ஒரு அசாதாரண ஆர்வமும் - அவற்றுடன கூட வியக்கத்தகு பெருந்தன்மையும் ஆழ்ந்த அரசியல் ஞானமும சங்கிலிபோல பின்னிப் பிணைந்து இருந்தன.

எந்த பிரச்சினைபற்றியும் அவரது தெளிவான கணிப்பும், துல்லியமான விளக்கங்களும் அவரை உலகத்தலைவராக உயர்த்தியது.

கார்ல் மாக்ஸ், எங்கல்ஸும் தந்த புகழ்மிக்க பொக்கிஷமான கம்யூனிஸ சித்தாந்தங்களை நன்குபுரிந்து அதனைதெளிவுற தொழிலாளர்களுக்கு கற்பித்த மாமேதை லெனின் சுதந்திர காதல் பற்றியும் பெண்களின் விடுதலை பற்றியும்- வர்க்க விடுதலை பற்றியும்- போராளிகளுக்கிடையே உள்ள பெலயீனம் பற்றியும் கூட தெளிவான விளக்கங்களை வழங்கியுள்ளார்.

மக்கள் தலைவனின் படைப்புகள் சர்வதேசம் முழுவதுமுள்ள 125க்கு மேற்பட்ட மொழிகளில் பிரசுரமாகியுள்ளதுகுறிப்பிடவேண்டிய அம்சமாகும்.

— சபா. புஷ்பநாதன —

''உலகதொழிலாளர்களே ஒன்று சேருவகள்'' என சர்வதேசம் முழுமையுள்ள பாட்டாளிகளுக்கு வேண்டுகோள் விடுத்த மாமேதையை இன்று உலகம் நன்றியுடன் தலை வணங்கி நினைவுகூருகிறது.

சோவியத் நாட்டிலுள்ள வொல்கா நதிக் கரையில் சிம்பீர்ஸ்கி நகரில் 1870 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 22ஆம் திகதி லெனின் பிறந்தார்.

மரப்பலகையினாலான

பாட்டாளிகளை சுரண்டலிலிருந்தும் அடிமைத்தளையிலிருந்தும் முழுமையான விடுதலையாக்க சரியான பாதையை வகுத்துக் கொடுத்ததுடன் அவர்களை ஒற்றுமைப்படுத்தி போராளர்களாக மாற்றியமைக்காக அதியுயர்ந்த கௌரவத்துடன் மாமேதை லெனின் நினைவு கூரப்படுகிறார்.

பாட்டாளிகள் இந்த உலகில் வாழும்வரை தலைவர் லெனின் வாழ்ந்து கொண்டேயிருப்பார். அவரை மறக்க முயலுபவர்களும் - லெனினை மறைக்க முயலுபவர்களும் மறைந்து கொண்டே போகிறார்கள் - ஆனால் லெனின் சகல போராட்டங்களிலும் போராளிகளுடன் முன்நின்று போராடுகிறார்.

அவர் நாமம் என்றும் நிலைத்திருக்கும்.

# பிரேதங்களை நாய்களிடமிருந்து

### பாதுகாக்க வேண்டி உள்ளது

கிளிநொச்சி, ஜன. 21

கிளிநொச்சி ஆஸ்பத்திரிக்கு கொண்டு வரப்படும் பிரேதங்களை, அங்கு தங்கி சிகிச்சை பெறும் நோயாளர்களே பாதுகாக்க வேண்டியுள்ளது.

அண்மையில் பிரேதம் ஒன்றை நாய் இழுத்துச் செல்ல முயன்றது.

மனம் பொறுக்க முடியாத நோயாளர், பிரேதத்தை பாதுகாப்பாக பிரேத அறைக்குக் கொண்டுவந்து சேர்த்தனர்.

தற்போதைய பதற்ற நிலையில் கிளிநொச்சி ஆஸ்பத்திரி நிர்வாகம் சீர்கெட்டதே இந்த அவல நிலைக்குக் காரணம்.

### ஆசிரியைகளாக இருந்தால்

# பாதுகாப்புப் படை வீரரின் மனைவிமாருக்கு இடமாற்றத்தில் முன்னுரிமை

கொழும்பு, ஜன .21

ஆசிரியைகளாக உள்ள பாதுகாப்புப்படையினரின் மனைவிமாருக்கு இடமாற்றம் வழங்குவதில் முன்னுரிமை வழங்கப்படும்.

அவர்கள் கோரும் இடங்களுக்கு இடமாற்றம் செய்யப்படுவர்.

இதற்கான உத்தரவை கல்விச் சேவை ஆணைக் குழு விடுத்துள்ளது.

4,500 ஆசிரியர்கள் இடமாற்றம் கோரி ஆணைக்குழுவிற்கு விண்ணப்பித்துள்ளனர்.

இவர்களில் 45 பேர் பாதுகாப்புப் படையினரின் மனைவிமார் என்பது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்கள் வாழ்க்கையில் என்றோ ஒரு நாள் வரும்
அந்த நிகழ்ச்சிகளை என்றும் உயிர் ஓவியமாக
வீடியோ படம் பிடிக்கும் வேளையில்
'உதயன்' பத்திரிகையிலும்
வாழ்த்தி மகிழ்ந்திட
இன்றே நாடுங்கள்
ஸ்ரார் வீடியோ
கொம்பிளெக்ஸ்
"ராஜ் கொற்", தபால் கந்தோர் அருகாமை
கொண்டாவில் கிழக்கு, கொண்டாவில்.

உதயன்

21-01-1986

Any Function at Your Home?
Remember this name for
Recording & Free
Wishes through UTHAYAN
Star video complex
'RAJ-COT' Near Post Office
KONDAVIL EAST, KONDAVIL.

# ஆயுதப்படையை ஏவி ஜனாதிபதி தன்னுடைய இலட்சியத்தை அடையமுடியாது

## பொதுமக்கள் மகஜர்

சுன்னாகம், ஜன. 21

ஒரு நாடு, ஒரு தேசிய இனம், ஓர் அரசாங்கம், ஒரு கொடி என்ற ஜனாதிபதியின் இலட்சியத்தை, அப்பாவித் தமிழ் பேசும் மக்கள் மீது சிங்கள ஆயுதப்படையினரையும் காடையர்களையும் ஏவிவிடுவதன் மூலம் அடைந்து விடமுடியாது. சரியான முறையில் சிந்திக்கும் எவரும் இதனை நம்பமாட்டார்கள்.

ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனாவுக்கு அனுப்பப்பட்டுள்ள மகஜரில் ஏழாலை, குரும்பசிட்டி, குப்பிளான், புன்னாலைக் கட்டுவன் மக்கள் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளனர்.

நேற்று குரும்பசிட்டியில் இருந்து உடுவில் உதவி அரச அதிபர் பணிமனை வரை நடத்தப்பட்ட ஊர்வலம் முடிவில் மேலதிக அரச அதிபரிடம் இந்த மகஜர் கையளிக்கப்பட்டது.

ஜனவரி 15 ஆம் 17 ஆம் திகதிகளில் இப்பகுதிகளில் ஆயுதப்படையினர் நடத்திய அட்டூழியங்கள் பற்றி இம்மகஜரில் விரிவாக எடுத்துக் கூறப்பட்டுள்ளது.

மகஜரில் பின்வருமாறு தெரிவிக்கப்படுகிறது.

கடந்த ஒரு வாரகாலமாக இப்பகுதிகளில் இடம்பெற்ற கொடூரமான கொலைகள், வீடு எரிப்புச் சம்பவங்கள், கொள்ளைகள், ஆத்திரமூட்டப்படாத நிலையில், ஆயுதப்படையினரால் மேற்கொள்ளப்பட்டன.

நஷ்டங்கள், மக்கள் படும் துன்பங்களை நம்புவதானால் நேரில் வந்துதான் பார்க்க வேண்டும்.

சட்டம், ஒழுங்கில் மக்கள் வைத்துள்ள கொஞ்ச நம்பிக்கையையும் அழிக்கும் விதத்திலேதான் ஆயுதப்படையினரின் அத்துமீறல் அமைந்துள்ளது ஜனாதிபதிக்குத் தெரியாத ஒன்று அல்ல. இச்செயல் விரும்பத்தகாத முகாம்களுக்குள் மக்களைத் தள்ளுவதில்தான் முடியும்.

முகாம்களில் இருந்து ஆயுதப்படையினர் வெளியே வருகின்றார்கள் என்றவுடன், உயிரைப் பாதுகாப்பதற்காக உடைமைகளைக் கைவிட்டு மக்கள் ஒளிக்கின்றார்கள்.

வீடுகளில் உள்ள பொருள்களைக் கொள்ளை அடிக்கவும் வீடுகளை எரிக்கவும் இது ஆயுதப்படையினருக்கு உதவுகின்றது.

சிவில் அதிகாரிகளைக் கொண்டு நடத்தப்படும் சுதந்திரமான விசாரணை ஒன்றே நடந்த அட்டூழியம் பற்றிய விவரங்களை வெளிக்கொணரும்.

ஆத்திரமூட்டப்படாமலே ஆயுதப்படையினர் இந்த அட்டூழியத்தில் ஈடுபட்டனர் என்பதையும் அந்த விசாரணைதான் வெளிப்படுத்தும்.

ஆயுதப்படையினரின் அட்டூழியங்களுக்கு முற்றுப் புள்ளி வைப்பதன் மூலம் அப்பாவி மக்களின் உயிர்களையும் உடைமைகளையும் காப்பாற்றுங்கள்.

ஜனநாயகத்தின் பெயராலும் மனித உரிமைகள் பெயராலும் இவ்வேண்டுகோளை விடுக்கின்றோம்.

1,000 மீட்டர் பாதுகாப்பு வலயப் பிரதேசப் பிரகடனம் யாழ் குடாநாட்டில் ஒரு மூலையில் கூட குடிமக்கள் நிம்மதியாக வாழ முடியாத நிலையைத்தான் ஏற்படுத்தி உள்ளது.

அந்த அளவு இராணுவ முகாம்கள் யாழ் குடாநாட்டில் உள்ளன. கொலைகளை நிறுத்த பாதுகாப்புவலயப் பிரகடனத்தை வாபஸ் பெற வேண்டும். இப்படி மகஜரில் கூறப்பட்டுள்ளது.

மகஜர் ஜனாதிபதிக்கு, யாழ் அரச அதிபர் ஊடாக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

மகஜரின் பிரதிகள், இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி, இலங்கையில் உள்ள இந்தியத் தூதுவர் ஜே என் டிக்ஸிற், அமைச்சர் தொண்டமான் ஆகியோருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

ஜனவரி 15ஆம், 17ஆம் திகதிகளில் ஏழாலை, குரும்பசிட்டி, குப்பிளான், புன்னாலைக்கட்டுவன் பகுதிகளில் நடந்த கொலைகள், கொள்ளைகள், அட்டூழியம் பற்றிய விபரங்களும் மகஜரில் இணைக்கப்பட்டுள்ளன.

அவ்விவரங்கள் வருமாறு:

15 - 1 - 1986

1. 52 வயதான மயிலர் கந்தையா, புன்னாலைக்கட்டுவனில் வைத்துச் சுட்டுக் கொல்லப்பட்டார். சுன்னாகம் சந்தையில் வீடு இருந்து திரும்புகையில் இச்சம்பவம் நடந்தது.

2. ஆயுதப்படையினர் சுட்டு 15 பேர் காயமடைந்தனர்.

3. புன்னாலைக்கட்டுவனில் திரு. இரத்தினம் சிறிஸ்கந்தராசாவின் வீடு, பெற்றோல் குண்டு வீசப்பட்டு எரிக்கப்பட்டது.

4. புன்னாலைக்கட்டுவனில் யாழ் - பலாலி வீதியில் சுமார் 25 வீடுகளில் நகைகள், பணம், டெலிவிஷன்கள் முதலியன கொள்ளை இடப்பட்டன. வீடுகள் சேதமாக்கப்பட்டன. 10 லட்சம் ரூபா வரை சேதம் ஏற்பட்டுள்ளது. சுமார் 50 வீடுகளில் கண்ணாடி யன்னல்கள், கதவுகள் சேதமாக்கப்பட்டன.

17 - 1 - 1986

1. ஏழாலையைச் சேர்ந்த கதிர்காமர் சந்தவனம் (65 வயது), திருநாவுக்கரசு சுகிர்தரூபன் ஆகியோர் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

2. திருமதி சின்னையா சித்திரம் என்பவருக்குரிய வீடு சேதமாக்கப்பட்டது. 38,000 ரூபா பெறுமதியான நகைகள் கொள்ளை இடப்பட்டன.

3. ஏழாலை முருகேசு கந்தையாவுக்குரிய வீடு எரிக்கப்பட்டது. 5 லட்சம் ரூபா பெறுமதியான பொருள்கள் கொள்ளை இடப்பட்ட பின்னரே வீடு எரிக்கப்பட்டது.

4 என். பாலசுப்பிரமணியத்தின் வீடு கொள்ளை இடப்பட்ட பின்னர் எரிக்கப்பட்டது

# தொண்டா கை ஓங்கிவிட்டது அவர் ஜனாதிபதி ஆனாலும் ஆச்சரியமில்லை

## சிறிமாவோ கூறுகிறார்

இறக்குவானை, ஜன 21

இன்று திரு. தொண்டமானின் கை மேலோங்கி விட்டது. அவர் ஜனாதிபதியானாலும் ஆச்சரியப்படத்தேவை இல்லை.

இப்படி சுதந்திரக் கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா சொன்னார்.

இறக்குவானையில் நடந்த பொதுக்கூட்டம் ஒன்றில் பேசுகையில் திருமதி பண்டாரநாயக்கா மேலும் சொன்னதாவது;

ஐ. தே. க. அரசாங்கத்தை இன்று ஆட்டிப் படைப்பவர் திரு. தொண்டமான்.

கடந்த தேர்தலில் மலையகத் தமிழரின் வாக்குகளினால் பதவிக்கு வந்தவர் ஜெயவர்த்தனா. அதனால் திரு. தொண்டமான் சொல்வதற்கு எல்லாம் திரு. ஜெயவர்த்தனா ஆடுகிறார்.

ஊவா மாகாணத்தில் பெரும் பான்மையோர் மலையகத்தமிழர்கள் இரத்தினபுரியில் 85,000பேர் மலையகத் தமிழர். நுவரெலியாவில் 100க்கு 65 வீதம் மலையகத் தமிழர்.

நுவரெலியா மாவட்டத்தில் 7 எம். பி.க்களில் 4பேர் அடுத்த தேர்தலில் மலையகத் தமிழராக இருப்பர்.

இதை சிங்கள மக்கள் மனதில் வைத்துக் கொள்ள வேண்டும்.

இன்று எப்படி தமிழ் மக்கள் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தனி நாடு கேட்கின்றார்களோ, அதுபோல திரு தொண்டமானும் நிச்சயம் விரைவில் 'மலைநாடு' கோரத்தான் போகிறார்.

சிங்களவரின் எதிர்காலம் இருண்டதாக மாறியுள்ளது.

நான் தமிழருக்கு விரோதி அல்ல.

ஆனால் நாட்டின் தற்போதைய நிலையை மாற்றுவதை நான் அனுமதிக்க முடியாது இதைச் சிங்கள மக்களும் அனுமதிக்கக் கூடாது.

இப்படி அவர் சொன்னார்.

## 4 ஆயுதப்படை வீரர் பலி

### சென்னையில் அறிக்கை

சென்னை, ஜன. 21

மட்டக்களப்பு திருக்கோவில் பகுதியில் போராளிகளின் கண்ணி வெடிக்கு நான்கு ஆயுதப்படையினர் பலியாகினர்.

ஈழப் பிரிவினர் என்ற அமைப்பு சென்னையில் விடுத்த அறிக்கை ஒன்றில் இப்படித் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

கிளிநொச்சி, யாழ்ப்பாணம் பகுதிகளில் நேற்று நடைபெற்ற இரண்டு சம்பவங்களில் 13 தமிழர்கள் கொல்லப்பட்டனர் என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

## லொறியில் கிடந்த....

(1ம் பக்க தொடர்ச்சி)

ஒன்றினுள் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன.

மட்டக்களப்பு மாவட்ட இணைப்பு அதிகாரி, தன்னைச் சந்தித்த மட்டக்களப்பு பிரஜைகள் குழுவிடம் சடலங்களை அடையாளம் காண உறவினர்களை அழைத்து வரும்படி கூறியிருந்தார்.

அதற்கு இணங்க ஒரு மினிவானில் உறவினர்களை ஏற்றிக்கொண்டு பிரஜைகள் குழுவினர் கல்லடி முகாமுக்குப் போனார்கள்.

லொறி ஒன்றினுள் அடுக்கி வைக்கப்பட்டிருந்த சடலங்களை அடையாளம் காண உறவினர்கள் அனுமதிக்கப்பட்டனர்.

அடையாளம் காண்பதற்கு ஜோர்ஜ் என்பவர் முதலில் சென்றார்.

சடலம் ஒன்றைப் புரட்டிப் பார்த்தார். அப்போது "கண்ணீர் தண்ணீர்" என்ற ஒரு சத்தம் கேட்டதாம்.

அடையாளம் காணப் போனவர் திடுக்கிட்டார். தன்னை அறியாமலே "ஆ" என்று கேட்டு விட்டார்.

சடலத்தை அடையாளம் காணப்போனவருக்கு சடலத்துடன் என்ன பேச்சு? அருகில் இருந்த ஆயுதப்படை வீரர் சந்தேகப்பட்டு, 'யாருடன்பேசுகிறீர்?' என்று கேட்டார்.

தண்ணீர் வேண்டும் என்று 'சடலம்' கேட்கிறது என்று அவர் சொன்னார்.

அவ்வளவுதான்.

'சடலத்தை' தட்டி எழுப்பினர், ஆயுதப்படை வீரர். 'சடலம்' எழும்பியது!

அப்போதுதான் சடலங்களோடு சடலங்களாக உயிருள்ள ஒருவரும் லொறிக்குள் போடப்பட்டிருந்தார் என்ற விவரம் தெரிய வந்ததாம்:-

பின்னர் 'சடலமா'கக் கிடந்தவர் முகாமிற்குள் அழைத்துச் செல்லப்பட்டார் அவர் நடந்தே முகாமிற்குள் சென்றார்.

திடுக்கிடும் இச்சம்பவம் பற்றி அடையாளம் காணச் சென்ற பிரஸ்தாப நபர் பிரஜைகள் குழுவிடம் தெரிவித்தார். அப்போதும் அவரைப் பீடித்திருந்த பயப் பிராந்தி போகவில்லை.

## இராணுவ அத்து..

(1ம் பக்கத் தொடர்ச்சி)

திரண்டு நின்று தமது ஆதரவைத் தெரிவித்தனர் கடைகள் பூட்டப்பட்டு அனுதாபம் தெரிவிக்கப்பட்டது.

ஊர்வலம் முடிவடைந்த பின்னரே வர்த்தக ஸ்தாபனங்கள், வங்கிகள்-அரச நிறுவனங்கள் யாவும் திறக்கப்பட்டன.

சுன்னாகம் பிரஜைகள் குழுத் தலைவர் திரு. தி. மாணிக்கவாசகர், வயாவிளான் ஆசிரியர்கல்லூரி ஆசிரியர் எஸ் நடராஜா, ஏழாலை மகாவித்தியாலய அதிபர் திரு. எஸ் திருநாவுக்கரசு (நாவேந்தன்) மயிலிட்டிபிரஜைகள்குழு செயலாளர் திரு. வி. சுப்பிரமணியம் ஆகியோர் ஊர்வலத்துக்கு தலைமை வகித்தனர்.

## யாழ் நகரில் நேற்று...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

குண்டு தகரப்படலை ஒன்றையும் கடைக் கதவுகளையும் சேதப்படுத்தியது.

அதே சமயம் சென்பீட்டர்ஸ் தேவாலய மதகுருவின் இல்லத்தின் ஜன்னல் ஊடாகவும் ஒரு சன்னம் பாய்ந்தது.

இதன் பின்னர் இராணுவத்தினர் முகாமுக்குள் திரும்பிச் சென்றுவிட்டனர்.

போராளிகள் நகரின் முக்கிய சந்திகளில் நேற்று ஆயுதங்களுடன் தயார் நிலையில் காணப்பட்டனர்.

அதைத் தொடர்ந்து நகரில் சில மணி நேரம் பதற்றம் நிலவியது.

அதன் விளைவாக-நேற்றுக்காலை வேம்படி மகளிர் கல்லூரிக்கு வந்த மாணவிகள் திரும்பிச் சென்றனர். அந்த மாணவிகளைப் போராளிகள் பாதுகாப்பாக பஸ்கள் மூலம் அனுப்பிவைத்தார்கள், இதனால் நேற்று பாடசாலை நடைபெறவில்லை. இதேபோன்று. யாழ் மத்திய கல்லூரி மாணவர்களும் இச் சம்பவத்தினால் நாலா பக்கமும் சிதறி ஓடினார்கள்.

துப்பாக்கி வேட்டுக்கள் யாழ் நீதி மன்றத்தின் சில பகுதிகளைச் சேதப்படுத்தியது சில துப்பாக்கி ரவைகள் யாழ் அரசினர் வைத்தியசாலை முன்றலில் வந்து விழுந்தன. இதனால் காலை வெளிநோயாளர் சிகிச்சைப் பிரிவுக்கு வருகை தந்த நோயாளிகள் மிகுந்த பதற்றம் அடைந்தனர்.

காலையில் நகருக்கு வந்த தனியார், அரச ஊழியர்கள் அன்றாடம் கருமங்களை முடிக்க வந்த மக்கள் சிலநிமிட நேரம் கிலிகொண்டு அங்கும் இங்குமாக ஓடினார்கள். தனியார் பஸ்கள், இ. போ. ச. பஸ்கள் டாக்சிகள் சம்பவத்தினால் பீதி கொண்டு ஓடி மறைந்தன.

சுமார் இருமணிநேரமாக யாழ் நகர் வெறிச்சோடிக் காணப்பட்டது.

## சடலங்களை உறவினர்களி.....

(1ஆம் பக்க தொடர்ச்சி)

சடலங்களை அடையாளம் காணலாம் என்றும்—

சடலங்கள் எக்காரணம் கொண்டும் உறவினர்களிடம் கையளிக்கப்படமாட்டா என்றும்— இணைப்பதிகாரி தெரிவித்தார்.

இறந்தோர் எண்ணிக்கை 21 ஆக அதிகரித்துள்ளது. இவர்களில் 9பேர் துப்பாக்கிச் சூட்டுக் காயங்கள் காரணமாக மரணமானார்கள். 12பேர் சைனைட் அருந்தி மரணமானார்கள்.

இப்படி இணைப்பதிகாரி மேலும் சொன்னார்.

பிரஜைகள் தூதுக்குழுவில் சகோதரி மலர் சின்னையா, வண பிதா சந்திரா பெர்னாண்டோ, சட்டத்தரணி சாம்தப்பி முத்து ஆகியோர் அங்கம் வகித்தனர்.

அடையாளம் காணப்பட்ட பிரேதங்கள் வருமாறு;

1. ஆரோக்கியம் சேவியர், வயது 17, கோட்டைமுனை மகாவித்தியாலயம்.

2 மைக்கல் ஞானதாஸ், வயது 21, திருமணமாகி 2 மாதங்கள்.

3. ரி சகாயநாதன், வயது 23,

4 ஜோர்ஜ் அன்ரனி.

கடைசி மூவரும் இருதயபுரம் தேவாலய ஊழியர்கள்.

5. எம். அருள்ராஜ், வயது 22, தபால் ஊழியர்.

6. அ. கந்தசாமி, வயது 35, தொழிலாளி.

7. என். வின்சென்ட் வயது 22, விவசாயி.

8. எஸ். தங்கராசா வயது 32

9. ரி. கேதாரம், வயது 32, மாநகரசபைத் தொழிலாளி.

10 அம்புரோஸ் ராஜு வயது 18.

11. எம். நவரத்தினம் வயது 28.

12. கே ரவீந்திரகுமார் வயது 22.

13. டொமினிக்தாஸன் வயது 24.

14. எஸ். இலங்கேஸ்வரன், வயது 24.

15. ஆர் கே. பியதாஸ வயது 20, மீன் வியாபாரி தமிழ்ப் பெண்ணை மணமுடித்த சிங்களவர்.

16. எஸ். தயாளன் வயது 24.

17 எம். மோகனதாஸ் வயது 19.

18 எஸ். தங்கராசா வயது 54.

ஏனைய 3 சடலங்கள் பற்றி தகவல் எதுவும் இல்லை.

ஆயுதப்படையினரால் அகற்றப்படாமல் வீட்டில் கிடந்த தங்கராசா (வயது 54) வின் சடலத்தை அவரின் உறவினர்கள் நேற்று அடக்கம் செய்தனர்.

## பாதுகாப்பு வலயத்தை உடனே....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

எதிர்க்கட்சித் தலைவர், சகல முஸ்லிம் அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோருக்கு ஒரு மகஜரை அவர்கள் அனுப்பி வைத்திருக்கிறார்கள்.

யாழ் முஸ்லிம் சமாதான சபையினர் சகல முஸ்லிம் பிரதிநிதிகளையும் அழைத்து கடந்த ஞாயிற்றுக்கிழமை கூட்டம் ஒன்றைக் கூட்டினார்கள்.

யாழ் ஜமா அத்தே இஸ்லாமிய இயக்கம், யாழ் முஸ்லிம் பாதுகாப்பு அமைப்பு, யாழ் இஸ்லாமிய இளைஞர் அமைப்பு, யாழ் முஸ்லிம் வர்த்தகர்போக்குவரத்து அமைப்பு, யாழ் முஸ்லிம் லீக் வாலிப முன்னணி, யாழ் ஜும்மா மசூதி முஸ்லிம் லீக், யாழ் முஸ்லிம்கள்.

யாழ் முஸ்லிம் மறுமலர்ச்சி இயக்கம், அமைப்புகளது ஒன்றியம் ஆகியவற்றின் பிரதிநிதிகளும்—

சகல பள்ளிவாசல்களினதும் பரிபாலகர்கள், உலமாக்கள், யாழ்ப்பாணம் மாவட்டசபை, மாநகர சபை ஆகியவற்றின் முன்னாள் முஸ்லிம் உறுப்பினர்கள், முஸ்லிம்களான சட்டத்தரணிகள், சமாதான நீதிபதிகள் ஆகியோர் இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டார்கள்.

கூட்டத்தில் மேற்படி இரண்டு கோரிக்கைகளையும் சம்பந்தப்பட்டவர்களுக்கு அனுப்பி வைப்பது என ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

## கையெழுத்து இயக்கம் அவசியம்

### பிரஜைகள் குழுக்கள் கூறுகின்றன

யாழ்ப்பாணம், ஜன 21

பொதுமக்களுக்கு ஆபத்தான நிலையை ஏற்படுத்தியிருக்கும் பாதுகாப்பு வலய பிரகடனத்திற்குப் பாடசாலைகள், வைத்தியசாலைகள், சமய நிறுவனங்கள், வர்த்தக ஸ்தாபனங்கள், போக்குவரத்துச் சங்கங்கள் போன்ற பொது அமைப்புகள் ஒன்றிணைந்து முழுமூச்சாக எதிர்ப்புத் தெரிவிக்கவேண்டும்.

பொதுமக்கள் சகல மட்டங்களிலும் தமது எதிர்ப்பைத் தெரிவிக்கும் வகையில் கையெழுத்து இயக்கம் ஒன்றினைத் தொடங்குவது அவசியம்.

தமிழ்ப் பிரதேசத்தில் உள்ள பிரஜைகள் குழுக்களின் இணைப்புக் குழுக் கூட்டத்தில் இப்படி வற்புறுத்தப்பட்டது.

இக்கூட்டம் யாழ் ஆயர் இல்லத்தில் நேற்று நடைபெற்றது.

கூட்ட முடிவில் விடுக்கப்பட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்ததாவது:-

17-1-86 இல் இவ் இணைப்புக் குழு ஜனாதிபதிக்கு தனது ஆட்சேபத்தைத் தெரிவித்துள்ளதுடன் அதனை வாபஸ் பெறுமாறும் கோரியுள்ளது.

இணைப்புக் குழு இன்று இணைப்பு அதிகாரியைச் (22-1-86) சந்திக்கும் போது இப்பிரதேசத்தில் பாதிக்கப்படும் பிரதேசங்களின் பிரஜைகள் குழுக்களையும் அழைத்து இப் புதிய பிரகடனம் ஏற்படுத்தியுள்ள பேராபத்தான நிலையை எடுத்துக் கூறுவதென தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இக்கூட்டத்திற்கான இணைப்பு வேலைகளை ஒழுங்கு செய்து தருவதற்கு யாழ் அரசாங்க அதிபர் ஒத்துக்கொண்டுள்ளார்.

பிரிகேடியருடனான சந்திப்புக்கு அரச அதிபரின் பிரதிநிதி ஒருவரும் இணைப்புக் குழுவுடன் அனுப்பப்படுவார் என அறிவித்துள்ளார்.

பருத்தித்துறை, வல்வெட்டித்துறை, பலாலி, நாவற்குழி, மயிலிட்டி ஆகிய பகுதிகளின் பிரஜைகள் குழுக்கள் இச் சந்திப்பிற்காக அழைக்கப்பட்டுள்ளன.

## இஸ்லாமிய இளைஞர் அமைப்பு

யாழ்ப்பாணம், ஜன. 21

அரசாங்கத்தின் பாதுகாப்பு வலய பிரகடனம் சிறுபான்மை முஸ்லிம்களை கஷ்டங்களுக்கும், துயரங்களுக்கும் உள்ளாக்கும் நிலையை ஏற்படுத்தியிருக்கிறது.

ஆகையினால் பிரகடனத்தை வாபஸ் பெற வேண்டும்.

யாழ்ப்பாணம் இஸ்லாமிய இளைஞர் அமைப்பு இப்படிக் கூறியிருக்கிறது.

பாதுகாப்பு வலயம் அமுலுக்கு வரமுன்னரே குறுகிய காலத்தில் ஏழுக்கும் மேற்பட்ட முஸ்லிம்களின் உயிர்கள் பலியாகியிருக்கின்றன.

இந் நிலையில் பாதுகாப்பு வலயம் சிறுபான்மை முஸ்லிம்களின் உயிருக்கும் உடைமைக்கும் உத்தரவாதம் அளிக்க முடியாத நிலையை ஏற்படுத்தியிருக்கிறது.

இப்படி இஸ்லாமிய இளைஞர் அமைப்பு விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

## கம்யூனிஸ்ட் கட்சி (இடது)

யாழ்ப்பாணம், ஜன. 21

பாதுகாப்பு வலயபிரகடனமும், பெரும் ஆயுதங்களைப் பாவிப்பதற்கான அனுமதியும் தமிழ் மக்களைப் பீரங்கிக்கு தீனிகளாக்கும் புதிய நடவடிக்கை என்றே கொள்ள வேண்டும்.

இம்முடிவை இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி (இடது) வன்மையாகக் கண்டிக்கின்றது. இதை உடன் வாபஸ் பெற வேண்டும் என வற்புறுத்துகிறது.

இவ்வாறு இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி (இடது) பொதுச் செயலாளர் திரு. சே. ஏ. சுப்பிரமணியம் அரசியல் குழு சார்பாக வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

தமிழ் மக்களைப் பற்றி சிறிதளவேனும் அக்கறை காட்டாத, முன் பின் யோசனையற்ற அரசின் இம்முடிவுகள் உடன் வாபஸ் வாங்கப்பட வேண்டும். தமிழ் மக்களை மென்மேலும் விரக்திப் படுத்தி நசுக்க முற்படும் செயல்களை நிறுத்த வேண்டும் என அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது:

## பதில் கிடைக்கு...

(1ஆம். பக்க தொடர்ச்சி)

களை தமிழர் விடுதலைக் கூட்டணி அரசியல் குழு நிராகரிக்கிறது என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

## பிரிகேடிய...

(1ஆம் பக்க தொடர்ச்சி)

விஸ்வலிங்கம், வணபிதா மைக்கல்சாமி ஆகியோர் பிரஜைகள் தூதுக்குழுவில் அங்கம் வகிக்கின்றனர்.

மக்கள் செயலூக்கக் கமிட்டித் தூதுக்குழு அலை பத்து மணிக்குச் சாதிக்கின்றது. இத்தூதுக் குழுவில் 11 பேர் அங்கம் வகிக்கின்றனர்.

அச்சிடுவோரும் வெளியிடுவோரும்: நஷ்ரூஉமா எக்ஸ்போட்ஸ் லிமிட்டெட். 207, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். அச்சகம்: 15, 2 ஆம் ஒழுங்கை, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். வெளியிட்ட திகதி 21-01-1986.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org